**செய்தி வெளியீடு எண்:423** **நாள்:10.07.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், இன்று 10.07.2021 காலை பத்திரிகைச் செய்தி ஒன்றினைப் பார்த்து, அதில் தமிழ்நாடு முடித்திருத்துவோர் சங்க நிர்வாகிகள் சில கோரிக்கைகளை முன்வைத்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வெ.கணேசன் அவர்கள் தமிழ்நாடு முடித்திருத்துவோர் சங்கங்களின் மாநில, மாவட்ட நிர்வாகிகளை உடனடியாக அழைத்து, இன்று தலைமைச் செயலகத்தில் அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

இச்சந்திப்பின்போது, சங்க நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சியின் மீது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது என்றும், பொதுமக்களுக்குக் கொரோனா காலத்தில் முதல் கட்டமாக ரூ.2,000/–மும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜுன் 3–ம் தேதி ரூ.2,000/–மும், மளிகைப் பொருட்களும் வழங்கியமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தனர். மேலும், மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களிடம் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முடித்திருத்துவோர் சங்கங்களின் நிர்வாகிகளின் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

மேலும், ஒரு சங்கத்தின் நிர்வாகிகள் தங்களது சங்கத்தின் 41–வது ஆண்டு தொடக்க விழாவில் கலந்துகொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்தனர். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று கலந்து கொள்வதாக உறுதி அளித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**